**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி. கோ. சந்தியா (தா/பெ (மறைந்த) திருமதி. K. வனஜா) என்பவருக்கு 16.07.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி(தொ.க.1(2)) துறை**

அரசாணை (2டி) எண்.63

நாள்: 12.03.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது வருடம்,
மாசி மாதம் 29

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 26.02.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.000926/ஜே/இ1/2024, நாள் 24.01.2024.

******

**ஆணை:-**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திருமதி. கோ. சந்தியா என்பவர் இளநிலை உதவியாளராக 16.07.2021 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தாயார் திருமதி. K. வனஜா என்பார் விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியம், சோழியசொற்குளம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 21.06.2013 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் திருமதி. கோ. சந்தியா என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 04.03.1992 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியம், சோழியசொற்குளம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திருமதி. K. வனஜா என்பவரின் வாரிசான அவரது மகள் திருமதி. கோ. சந்தியா என்பவர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், எந்த விதித்தளர்வும் எழவில்லை எனவும் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளதன் அடிப்படையில், தனியரை இளநிலை உதவியாளர் பதவியில் அவரது நியமன நாளான 16.07.2021 முற்பகல் முதல் அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
(தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ் இணைப்புடன்)

**நகல்:–**

பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/03/2024
பிரிவு அலுவலர்.

12-3-2024

/பதிவஞ்சல் / ஒப்புகையுடன்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை – 6

ந.க.எண்.000926/ஜே/இ1/2024, நாள் 15.04.2024

********

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – விழுப்புரம் மாவட்டம், சோழியசொற்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி – தலைமை ஆசிரியர் – திருமதி.K.வனஜா – 21.06.2013-ல் இறப்பு – மகள் திருமதி.கோ.சந்தியா இளநிலை உதவியாளர் பணி வாய்ப்பு வழங்கப்பட்டது பணியில் சேர்ந்த நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அசல் அனுப்புதல் – சார்ந்து.

கல்வி அலுவலர் ... 14 MAY 2024 ... விழுப்புரம் மாவட்டம்

பார்வை:

1. விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செ.மு.ந.க.எண். 3783/அ3/2021 நாள். 14.07.2021.
2. விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.3783/அ3/2021 நாள். 02.01.2024.
3. அரசாணை (2டி) எண்.63, பள்ளி கல்வி (தொ.க.1(2)) துறை நாள் 12.03.2024.

------

விழுப்புரம் மாவட்டம், சோழியசொற்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 21.06.2013-ல் காலமான திருமதி K.வனஜா என்பவரின் வாரிசுதாரராகிய மகள் திருமதி கோ.சந்தியா என்பவருக்கு பார்வை 1–ல் கண்டவாறு கருணை அடிப்படையில் சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு 16.07.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் அன்னாரது பணியினை பணியில் சேர்ந்த நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து பார்வை 3-ல் கண்டவாறு அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்து வெளியிடப்பட்டுள்ள அசல் ஆணை மற்றும் கீழ்கண்ட அசல் ஆவணங்கள் மற்றும் அசல் பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் அனுப்பப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை மறு அஞ்சலில் அனுப்புமாறு விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும், மேற்கண்ட பணிவரன்முறை ஆணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டிட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

1. பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட அசல் ஆணை-2
2. மனுதாரர் கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாய்ப்பு கோரிய விண்ணப்பம் அசல்-1.
3. இறப்பு சான்று அசல்-1
4. திரு.கோவிந்தன் என்பவரின் இறப்பு சான்று அசல்.
5. வாரிசு சான்று அசல்-1
6. ஒருங்கிணைந்த சான்று அசல்-1
7. அரசாணை எண்.29ன் படியான உறுதி மொழி படிவம் அசல்
8. தமிழ்நாட்டில் எங்கும் பணிபுரிய விருப்பம் தெரிவித்த உறுதிமொழி கடிதம்.
9. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல்-1
   S.No. SEC 4728991/Reg.No.537385/ MAR 2007
10. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் உண்மைத் தன்மை குறித்த அறிக்கை அசல்-1.
11. காலகெடு சான்று அசல்
12. இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
13. இறந்த அரசு ஊழியர் பணியினை பணிவரன்முறை செய்தமைக்கான பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
14. பணிநியமன ஆணை அசல்.
15. தனியரது பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
16. தனியர் பணியில் சேர்ந்த பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்.
17. தனியரின் பணிப்பதிவேடு அசல் - 1 தொகுதி

17/04/17

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர் முதன்மைக் கல்வி அலுவலர்,
விழுப்புரம் மாவட்டம் (பெயரிட்ட உறையில்)

விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3783 / அ3 / 2021. நாள். 11.06.2024

பொருள் : பள்ளிக்கல்வி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - விழுப்புரம் மாவட்டம், சோழியசொற்குளம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.K.வனஜா பணியிடையில்-21.06.2013-ல் இறப்பு-வாரிசுதாரரும், மகளுமான திருமதி.கோ.சந்தியா என்பாருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கப்பட்டது - பணியில் சேர்ந்த நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து அரசாணை பெறப்பட்டது. அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை 1. அரசாணை(2டி)எண்.63, பள்ளி கல்வி [தொ.க.1(2)]த் துறை நாள்.12.03.2024.
2.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணைஇயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள்: ந.க.எண்.000926/ ஜே/இ1/2024, நாள்.15.04.2024.

**********

விழுப்புரம் மாவட்டம், சோழியசொற்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து, பணியிடையில் 21.06.2013-ல் காலமான திருமதி.K.வனஜா என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான திருமதி.கோ.சந்தியா என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவாய்ப்பு விழுப்புரம் மாவட்டம் சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் வழங்கப்பட்டு அன்னார் பணியில் சேர்ந்த நாளான 16.07.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட பார்வை-1ல் காணும் அரசாணை பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட பார்வை-1ல் காணும் அசல் அரசாணை, பார்வை-2ல் காணும் செயல்முறைகளின் நகல், அசல் கல்விச்சான்றுகள் மற்றும் உண்மைத்தன்மை இத்துடன் இணைத்து சித்தலம்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அசல் கல்விச்சான்றுகள் மற்றும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு :

1. பார்வை-1ல் காணும் அரசாணைஅசல்.
2. அசல் கல்விச்சான்றுகள் மற்றும் உண்மைத்தன்மை.
3. அசல் பணிப்பதிவேடு.

13/6/2024

முதன்மைக்கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்- சம்மந்தப்பட்ட பணியாளர்(உரிய வழியாக)

நகல் - தலைமையாசிரியர்- அரசு மேல்நிலைப் பள்ளி, சித்தலம்பட்டு.

12/6/24.